# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

நம்பிக்கை ஆண்டு

ஆனி - ஆடி இதழ் - 2013. ஆரம்பம் 15-மாசி-2013. மறைக்கல்வி நடுநிலையம், டொக்கியாட் வீதி திருகோணமலை. தீபம்-01, சுடர்-03. விலை-20/=

Email:-catetcota@gmail.com

TP:-026 2221022,0779797230






எந்நிலையிலும் நம்பிக்கையெனும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் (எபே 6:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தோவியம்

## மறுபடியும் பிறப்போம்.

என்னிடம் அண்மையில் ஒருவர் கேட்டார், பாதர் நம் வழிபாடுகளில் (கத்தோலிக்க) நாம் அல்லேலூயா சொல்லலாமா, கைதட்டிப் பாட்டுப் பாடலாமா, கை உயர்த்தி ஜெபிக்க லாமா, இவைகளை பிரித்த சபையினர்தானே செய்கின்றனர், நாம் பரம்பரைக் கத்தோலிக் கர் அல்லவா இந்த ஐந்தாம் வேதக்காரர் களைப்போல் செய்வது தவறா?, சரியா? என்று கேட்டார். (வாசகர்களே உங்கள் கருத் தைச் சொல்லிவிட்டு தொடர்ந்து வாசியுங்கள்) நான் அப்பொழுது அவருக்கு வேதாகமத் திலிருந்து மேற்கோள்களைக் காட்டி பல உதாரணத்துடன் விளக்கப்படுத்தி தெளிவு படுத்தினேன். அவரோ அதை எற்றுக் கொள்வது கடினம் என்றும், தனக்கு அமைதி யான ஜெபம் தான் விருப்பம் என்றார்.

எனக்குப் பிரியமானவர்களே, வழிபாடுகள் பலவாயினும் வாழ்வு தருபவர் நம் ஆண்டவர் இயேசுவே. **"வாழ்வு தருவது தூய ஆவியே ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது, நான் கூறிய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியை கொடுக் கின்றன"** (யோவா 6:63) என்ற இயேசுவின் வார்த்தை எவ்வளவு சத்தியத்தை எமக்கு வெளிப்படுத்துகின்றன என்பது தெளிவு.

திருத்தூதர்கள் ஒவ்வொருவரும் தூய ஆவியி னால் நிறைந்த பரம்பரை கிறிஸ்தவர்கள். இயேசுவின் வார்த்தை, உயிர்ப்பின் இறை அனுபவம், ஆவியின் வல்லமை சாதாரண மீன்பிடி கலிலேயர்களை சாதனைமிக்க ஊழி யர்களாய் மாற்றியது. நாமும் இப்படிப் பட்ட பரம்பரை கிறிஸ்தவர்களாக எப்போது மாறப் போகின்றோம்?.

இன்று அனேக குருக்கள் இறைவார்த்தையை தெளிவுபடுத்தி, ஆவிக்குள் ஜெபித்து தம் பங்கு மக்களை இடுக்கமான வாயில் வழியே நடத்தி செல்லுவது எத்துணை மகிழ்ச்சி. அத் தோடு அனேக கத்தோலிக்கர்கள் இக்கா லத்தில் துணிவோடு, பயமில்லாமல், வெட்க மில்லாமல் ஆராதனைகளுக்கு வேதாக மத்தை எடுத்துச்செல்வது ஆவியானவர் தரும் சிறு மாற்றங்களில் ஒன்றாகும்.

- ★ அன்னை மரியாள் தூய ஆவியினால் கருவுற்றது போல, நாமும் ஆவியின் வல்லமையால் கருவுற்றுக் கனி கொடுப்போம். (மத் 1:18)
- ★ இயேசு நிக்கதேமுவிடம் மறுபடியும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு நுழைய முடியாது (யோவா3:3) என்றது போல, நாமும் மறுபடியும் ஆவியில் பிறப்போம்.
- ★ சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை விட, திருத்தூதர்போல் சாட்சிய வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.
- ★ கட்டுமான பணிகளில் மாத்திரம் நின்று விடாமல், ஆத்துமாக்களை ஆண்டவ ரிடம் கொண்டுவரும் கிறிஸ்தவர்களாய் மாறுவோம்.
- ★ எம் பங்கிலுள்ள வாலிபப் பிள்ளைகளு க்கு இறை அனுபவத்தை கொடுக்கும் ஜெப சந்தர்ப்பங்களை உருவாக்கி, எமது மறைமாவட்டத்தை ஆவிக்குரிய மறைமாவட்டமாக ஆண்டவரின் துணை கொண்டு மாற்றுவோம். ஏனெனில் "ஆண் டவரின் ஆவி எங்குண்டோ அங்கே விடுதலை" (2கொரி 3:17)

**Fr.S.**மதுராங்கன் குரூஸ்
ஆசிரியர்.

# பாதர் சொல்லும் கதை

ஒரு பள்ளிக்கூடம். ஆசிரியர் வகுப்பில் நுழைந்து கரும்பலகையில் எழுத ஆரம்பிக்கிறார். 3-6-12 இப்படி மூன்று எண்களை எழுதிவிட்டு மாணவர்களிடம் "மாணவர்களே .... இதன் தீர்வு"

அவசரக் குடுக்கையான ஒரு மாணவன் எழுந்து ஐயா! இது ஏறுமுகம்..... ஆகவே அடுத்த எண் 24... இதுதான் விடை

"இல்லை!" என்கிறார் ஆசிரியர்.

அடுத்து ஒரு மாணவி எழுந்து நிற்கிறாள். "ஐயா! அந்த மூன்று எண்களையும் கூட்டினால் 21 அதுதான் விடை"

"இல்லை .... இல்லை" மாணவர்கள் விழிக்கிறார்கள்.

இப்போது ஆசிரியர் விளக்குகிறார். "மாணவர்களே... நான் எந்தக் கணக்கையும் இன்னும் போடவில்லை. அதற்குள் விடை காண அவசரப்படுகிறீர்கள். இயல்பாக எனக்குத் தோன்றிய மூன்று எண்களைத்தான் கரும்பலகையில் எழுதினேன். மற்றப்படி நான் இப்போது எழுதியதற்குத் தீர்வு என்று எதுவும் இல்லை" என்றார்

ஆசிரியர் மறுபடி ஆரம்பித்தார். "இப்போது மறுபடியும் முயல்வோம்" என்று சொல்லிவிட்டு கரும்பலகையில் எழுதினார். 22,58,33,55

உடனே மாணவர்கள் சந்தேகத்துடன் கேட்டார்கள் "சார் இதன் தீர்வு என்ன?"..

ஆசிரியர் சிரித்துக்கொண்டே சொன்னார். "இதற்கான தீர்வை யாராலும் கண்டுபிடிக்க முடியாது ஏனென்றால் இது என் வீட்டு டெலிபோன் நம்பர்!" மாணவர்கள் அமைதியானார்கள்.

ஆசிரியர் பேச ஆரம்பித்தார். "மாணவர்களே! இந்த இரண்டு கணக்குகள் மூலமாகவும் உங்களுக்கு இரண்டு பாடங்கள் போதிக்க விரும்புகிறேன்.

உங்களுக்கு என்னுடைய முதல் அறிவுரை **கற்பனையான பிரச்சனைகளுக்கு அநாவசியமாக டென்சுஷன் ஆகாதீர்கள்.**

இரண்டாவது அறிவுரை : ரிலாக்ஸாக இருங்கள் என்றார்.

இன்றைய மனிதன் கற்பனையான பிரச்சனைகளிலேயே அதிகம் கலங்கிப் போகிறான் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்த பிறகு அல்லல்படுகிறான்.

விளைவு?..............

**"அலகை சோதனைகள் அனைத்தையும் முடித்த பின்பு ஏற்ற காலம் வரும்வரை அவரை விட்டு அகன்றது."** (லூக்:4:13)

**எனக்குப் பிரியமானவர்களே எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அலகையின், தீயவனின் சோதனை எப்பொழுதுமே உண்டு. எனவே நாம் தீர்மானம் எடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இயேசு கெத்சமனியில் ஜெபித்து முடிவு எடுத்தது போல் அவசரப்படாமல் ஆறுதலாக ஜெபித்து முடிவு எடுக்க ஆவியின் வரம் கேட்போம்..**

நன்றி (கடவுளைத் தேடாதீர்கள் - புத்தகம்)

**தொகுப்பு : Fr.** மது

## திருகோணமலை மறைமாவட்ட விவிலிய வினாவிடை போட்டி - 2013



**12 வயதுப் பிரிவு**
1ம் இடம் பாலையூற்றுப் பங்கு
2ம் இடம் குவாடலூப்பே பங்கு
3ம் இடம் உவர்மலைப் பங்கு



**16 வயதுப் பிரிவு**
1ம் இடம் பாலையூற்றுப் பங்கு
2ம் இடம் உவர்மலைப் பங்கு
3ம் இடம் குவாடலூப்பே பள்ளத்தோட்டம்/சாம்பல்தீவு பங்கு



**20 வயதுப் பிரிவு**
1ம் இடம் குவாடலூப்பே பங்கு
2ம் இடம் உவர்மலைப் பங்கு /அலஸ்தோட்டப் பங்கு

**வெற்றி பெற்ற அனைவரையும் தீபம் வாழ்த்துகின்றது.**

### திருகோணமலை மறைமாவட்ட ஆணைக்குழுக்களும் அதன் இயக்குனர்களும் -2013

| இல | ஆணைக்குழுக்கள் | இயக்குனர்கள் |
|---|---|---|
| 01 | அசிப்பா | அருட்பணி **I.**யூட்சர்வானந்தன் |
| 02 | தூய வின்சன் டி போல் சபை**(S.V.P)** | அருட்பணி யூஜின் போல் ஜொனத்தன் |
| 03 | மறைக்கல்வி நடுநிலையம் | இயக்குனர்-அருட்பணி **S.**அந்திரியாஸ் பெர்னாண்டோ (அ.ம.தி)<br>இணை இயக்குனர் -அருட்பணி **S.**மதுராங்கன் குரூஸ் |
| 04 | எகெட் நிறுவனம் | அருட்பணி **G.**நிதிதாசன் |
| | மரியாயின் சேனை | |
| | கிருப்பாலக்குதுவ சபை | |
| 05 | பொது நிலையினர் ஆணைக்குழு<br>இளைஞர் ஒன்றியம் **(C.Y.A)** | அருட்பணி **S.S.**ஜோண்பிள்ளை |
| 06 | சிறிய குருமட அதிபர் | அருட்பணி **S.**சுகுனேந்திரன் குரூஸ் |
| 07 | கத்தோலிக்க அருங்கொடை இயக்கம்<br>சமூக தொடர்பாடல் நிலையம்<br>ஜோசேவாஸ் செயலகம்<br>கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியம் | அருட்பணி **S.**மதுராங்கன் குரூஸ் |
| 08 | குடும்ப கத்தோலிக்க பணியகம் | அருட்பணி **A.** லியோ அன்டனி |
| 09 | கிறிஸ்தவ வாழ்வு ஒன்றியம் | அருட்பணி **A.** லியோ அன்டனி |
| 10 | நிதிப் பொறுப்பாளர் | அருட்பணி **C.**நோயல் இம்மானுவேல் |

தகவல்:- ஆயர் இல்லம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையாண்டு விஷேடபகுதி

## தூய ஆவியாரின் செயல்பாடுகள்

தூய ஆவியாரையும் அவரது ஆற்றலையும் அறிந்தவர்கள் அவரது உதவியைப் பெற்று வாழ ஆரம்பித்தால் தங்களது பழைய வாழ்க்கைக்குத் திரும்பிச் செல்வதில்லை. தூய ஆவியாரின் ஆற்றல் மிக்க செயல் பாடுகள் சொல்லொண்ணாச் சிறப்புடையவை. தூய பேதுருவின் கடிதங்களை வாசிக்கும்போது தூய ஆவிபற்றி என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார் என்று தேடிய வண்ணம் வாசித்திருக்கிறீர்களா? வழக்கமாகப் தூய பவுல் கூறும் தூய ஆவியாரைப் பற்றி அதிகம் அறிவோம். எனவே இக்கட்டுரையில் தூய பேதுரு எழுதிய சிந்தனைகளுக்கு முதன்மை அளித்து ஏனையச் சிந்தனைகளைப் பிறகு சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன். "தூய ஆவியார் அருளும் வாழ்வைத் தேடி என்னும் எனது நூலில் ஏராளமான மேற்கோள் காட்டியுள்ளேன். எத்தனை முறை தியானித்தாலும் தூய ஆவியாரின் செயல்பாடுகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கும் ஆற்றல் உடையவையாய் நம்மிலே வெளிப்படும்.

**தூய ஆவியாரால் தேர்ந்தெடுக்கப்பட்டோம்**

விண்ணக வீட்டின் திருப்பயணிகளாய் இவ்வுலகின் தற்காலக் குடிகளாய் வாழ்ந்து வரும் மக்களுக்கு அமைதியும் அருளும் பெருக வேண்டும் என வாழ்த்தி தனது நிருபத்தை ஆரம்பிக்கும் பேதுரு எதற்காகத் தூய ஆவியரால் இறைமக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்று தெளிவாக்குகிறார்.

அ) தந்தையாம் கடவுளின் முன்னறிவின்படி இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவும், அவரது இரத்தத்தால் தூய்மையாக்கப் படவும் தான் (1பேது 1:2)

ஆ) தூய ஆவியார் விண்ணின்று அனுப்பப்பட்ட நிலையில் நற்செய்தி அறிவிக்கச் செய்கிறார். (1பேது1:12)

இ) கடவுளுக்குரிய வாழ்வு அளிக்கிறார் தூய ஆவியார் (1பேது 4:6)

ஈ) கிறிஸ்துவின் பொருட்டு பிறர் வசை கூறும் போது நம்மை பேறுபெற்றவர்களாக்கி வல்லமையோடு நம்மீது தங்குகிறார். கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவியார் (1பேது 4:14)

உ) தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததை இறை வாக்காக அருளச் செய்கிறார் (2 பேது 1:21) இவ்வாறு தூய ஆவியாரால் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் தூய்மையானவர்களாய் இறைவாக்கினர்களாய் கடவுளுக்குரிய வாழ்வு வாழ்கின்றனர்.

**தூய ஆவிக்குரிய அடையாளங்கள்**

தூய ஆவிக்குரிய அடையாளங்கள் அவர் செயல்படும் ஆற்றல்மிக்க விதங்களையும் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

1) **எண்ணெய்: திருப்பொழிவு** (1சாமு 16:13) சாமுவேல் எண்ணெயினால் தாவீதை அருள் பொழிவு செய்தபிறகு ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. எசாயா 6:1-3 - இல் ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் என்று சொல்லியுள்ள பிறகு அவர் வெளிப்படுத்தும் செயல்பாடுகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அ) ஒடுக்கப் பட்டோருக்கு நற்செய்தி அறிவித்தல்

ஆ) உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்துதல்

இ) சிறைப் பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றுதல்

ஈ) கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவித்தல். இப்படியாகத் தொடர்ந்து சொல்லப்படும் அருள்தரும் ஆண்டினை அறிவித்தல், அநீதிக்குப் பழிவாங்கும் நாளை அறிவித்தல். துயருற்று அழுவோருக்கு ஆறுதல் அளித்தல். இப்படியாகத் தொடர்ந்து பல பணிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்த அருள்வாழ்வின் சிறப்பு என்னவென்றால் லூக்கா 4:18-19-இல் இயேசு தனது பணியைத் தொடங்குமுன் இந்தப் பகுதி யைத் தான் வாசித்து அவர் மெசியாவாக ஆற்ற வேண்டிய பணி என்ன என்பதனை தெளிவாக்குகிறார்.

ஆண்டவரின் ஆவி நம்மேல் இருந்தால் நாமும் இத்தகையச் செயல்களை ஆற்ற முடியும் 1 யோவா 2:27 - இல் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள் பொழிவால் அனைத்தையும் கற்றுக் கொள்ள முடியும் என்று சொல்லப் பட்டுள்ளது. இத்தகைய ஆற்றல் திருமுழுக்கு பெற்ற எல்லாரிலும் வெளிப்பட முடியும் உரோ 6:3-6- வரை உள்ள பகுதியில் தூய பவுல் இது குறித்துப் பேசுகிறார். திருமுழுக்கினால் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் நாம் அவரோடு சாவிலும் இணைந் திருக்கின்றோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில் அவர் உயிர்தெழுந்தது போல நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். ஆம் நாமும் புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம் என்கிறார் தூய பவுல். தூய ஆவியால் ஆட் கொள்ளப்பட்டால் புதுவாழ்விற்கு நாம் கடந்து வர முடியும் "மேலும் இறந்த இயேசுவை உயிர்த் தெழச் செய்தவரின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால் கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களுள் குடி கொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச்செய்வார்" (உரோ 8:11) நாமும் திருமுழுக்கின்போது அபிஷேகத்தைலம் பூசப்பட்டு இத்தகைய புதுவாழ்விற்கு உரியவராகிறோம்.

2) **புறா –தூய்மை** (மத் 3:17) இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ஆவி புறா இறங்குவதை உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள் (1பேதுரு 1:15) என்ற அழைப்பை பேதுரு சொல்வதுபோல தூய பவுலும் நீங்கள் தூயோராவதே கடவுளின் திருவுளம் (1தெச 4:3) என்கிறார். எனவே தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் ஒழுக்கக்கேடான வாழ்வு அல்ல தூய வாழ்வு வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம் (1தெச 4:7) என்பதை உணர வேண்டும். தூய ஆவியாரின் முக்கிய செயல்பாடு தூய்மைப்படுத்துதல். எனவே தூய வாழ்வு வாழ்ந்து சான்றுபகர வேண்டும்.

3) **வாழ்வு தரும் தண்ணீர் – செழுமை** (யோவா 37-38) யோவான் 7-ம் அதிகாரத்தில் இயேசு உரத்த குரலில் தாகமாய் இருப்பவர்களை அழைக்கும்போது அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்" (யோவா 7:37-38) என்று சொல்கிறார். ஆவியாரைத் தண்ணீராகக் கண்டு கொண்டவர்கள் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல் இருப்பார். பருவகாலத்தில் கனிதந்து என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார் (திபா 1:3) அத்தகையச் செழுமையை எரேமியா 7:7-8 லும் வாசிக்கிறோம். அதன் இலைகள் பசுமையாய் இருக்கும் வறட்சி மிகு காலத்திலும் அதற்குக் கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும் வாழ்வு தரும் நீரூற்றுக்கு அழைத்துச் செல்லும் போது கடவுள் கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார் (திவெ 7:17). எனவே தூய ஆவி அருளும் வாழ்விலே அருள் பொழிவு பாய்ந்து வர தூய்மைப் படுத்தப்பட்டு செழுமை வாழ்விற்குக் கடந்து செல்கிறோம்.

4) **நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவு – ஒன்றிப்பு** (திப 2:1-4) பெந்தகோஸ்து நாளிலே பிளவுற்ற நாவாக இறங்கிய ஆவியானவர் வெவ்வேறு மொழிகளில் பேசச் செய்தார். பாபேல் கோபுரம் கட்டிய போது ஒருவர் மற்றவரின் பேச்சைப் புரிந்து கொள்ள முடியாதபடி செய்து குழப்பம் ஏற்பட்டதை (தொநூ 11:7) மாற்றி மீண்டும் ஒன்றிப்பின் ஆவியை ஊற்றியதை வாசிக்கிறோம். திருத்தூதர்கள் பேசியதை அவரவர் தம் மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை பேசக்கேட்டனர். ஒன்றிப்பின் செயல்பாட்டைத் தூய ஆவியார் செய்கின்றார்.

5) **மேகம் - உன்னத ஆற்றல்.** ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை வழிநடத்த பகலில் மேகத் தூணிலும் இரவில் ஒளிகாட்ட நெருப்புத்தூணிலும் இருந்தார். பகலிலும் இரவிலும் அவர்கள் பயணம் செய்ய முன் சென்றார். பகலில் மேகத்தூணும் இரவில் நெருப்புத்தூணும் மக்களைவிட்டு அகலவேயில்லை (விப 13:21-22) அன்று பழைய இஸ்ரயேல் மக்களை மேகத்தூணில் உன்னத ஆற்றலை வெளிப்படுத்தி வழி நடத்திய இறைவன் புதிய இஸ்ரயேல் மக்களை வழி நடத்தவும் அன்னை மரியாமீது நிழலிட்டார் என்று வாசிக்கிறோம்.

"தூய ஆவி உம்மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்" (லூக் 1:35) என்ற வார்த்தையின்படி இறைமகன் இயேசு இவ்வுலகில் வந்துதித்தார். இத்தகைய வல்லமை நமக்கும் வாக்களிக்கப்பட்டுள்ளது.

"நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்" (லூக்24:49) என்று இயேசு கூறியுள்ளார். இயேசு தோற்றம் மாறிய மலையிலே ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று கடவுள் குரல் ஒலித்ததை வாசிக்கிறோம். (மத் 17:5) உன்னத வல்லமையை நமக்கு அருளப்போவதை 1:5- இல் வாசிக்கிறோம். நீங்களோ இன்னும் சில நாள்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள் என்று கூறியுள்ளார். "அந்த தூய ஆவி உங்களிடம் வருபோதும் நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலே மிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார் (திப 1:8)

தூய ஆவியாரின் ஆற்றல்மிக்க செயல் பாடுகளில் முக்கியமானது சான்று பகர்ந்து வாழ்வது. கடவுளின் ஆற்றல் நம் வழியாக வெளிப்படும்படி வாழ்வது. இயேசு செய்தவற்றை மட்டுமல்ல ஏன் அவற்றைவிடப் பெரியவற்றை செய்யும் உன்னத ஆற்றல் நம்மிலே வெளிப்பட முடியும் யோவா 14:12-ல் சொல்லியுள்ளபடி பெரியவற்றை ஆற்றும் ஆற்றல் தூய ஆவியாரின் செயல்பாடாக நம்மிலே வெளிப்பட்டும். கனி தரும் வாழ்வாக (கலா 5:22-23) நம் வாழ்க்கை சான்று பகரச் செய்யட்டும்

நன்றி : விவிலிய விருந்து

## சிறப்பான வாழ்வுக்கு சிக்கனம் அவசியம்

வாகனம் ஒழுங்காகச் செல்லுவதற்கு அது சீராக இயங்கவேண்டும். சீராக இயங்குவதற்கு அவசியமானவற்றில் பிரதானமானது பெற்றோல் அல்லது டீசல் ஆகும். இதே போன்று குடும்பம் சீராக இயங்க பொருளாதாரம் மிக அவசியம். எனவே கடின உழைப்பின் மூலம் குடும்பம் பெறும் பொருளாதாரத்தை தேவைக்கு ஏற்றபடி செலவு செய்யும் போது அதில் **ஒரு பகுதியை சேமிப்புச் செய்வது மிக அவசியமாகும்.** நாளொருவண்ணம் விலை ஏற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது அன்றாடத் தேவைகளுக்கே வரும் வருமானம் போதாமல் உள்ளபோது சேமிப்பு என்பது இயலாத ஒன்றாகவே நமக்குத் தோன்றும் இது உண்மை **ஆயினும் சேமித்தல் மிக மிக அவசியம் இதற்கு சிக்கனமே வழிகாட்டும்.**

சிக்கனம் என்பது மிகவும் பெறுமதி வாய்ந்த கோட்பாடாகும். இந்தக் கோட் பாட்டை வளர்த்துக் கொண்டவர்கள் எப்போதும் தாம் கஷ்ரப்பட்டு உழைத்த பணத்தை வீண் விரயம் செய்ய முயற்சிக்க மாட்டார்கள். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க பல வழிகள் உள்ளன. நாம் **நாளாந்தம் மேற்கொள்ளும் அவசியமற்ற செலவுகளை தடுத்தல் அல்லது குறைத்தல் இவற்றில் ஒன்றாகும்.**

முற்காலத்தில் பல்வேறு வகைகளில் இந்தச் சிக்கனம் மேற்கொள்ளப்பட்டு வந்தமை நாம் அறியலாம். சிறிய பிள்ளைகள் தமக்கு பெற்றோர் வழங்கும் சில்லறைக் காசுகளை உண்டியலில் போடுவதன் மூலம் சேமிப்புப் பழக்கத்தை தூண்டி விடலாம். **இன்று சேமிப்பு பற்றி வங்கிகள் பல்வேறு முறைகளை அறிமுகப்படுத்தி அமுல்படுத்தி ஊக்குவிக்கின்றன.**

எங்கள் வீட்டிற்கு கிடைக்கக் கூடிய வருமானத்தின் தொண்ணூறு வீதமாக பகுதிக் கேற்ப வீட்டின் செலவுகளைத் திட்டமிடுவதோடு, ஏற்படப்போகும் திடீர்ச் செலவுகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக எஞ்சும் பத்து வீதத்தைச் சேமித்தல் மிக மிக அவசியம். நாம் எவ்வளவுதான் திட்டமிட்டு வாழ்வை நகர்த்திக் கொண்டு சென்றாலும் திடீர் நோய்கள் வரும்போது பல சந்தர்ப்பங்களில் நாம் தடுமாறி விடுகிறோம்.

வீட்டிலிருந்து டொக்டரின் இருப்பிடத்திற்கும் பின்னர் அங்கிருந்து வீட்டிற்கு வருவதற்கு ஏற்படும் ஓட்டோ செலவு டொக்டருக்குரிய கட்டணம் அவர் மேலதிகமாக எழுதித் தரும் மருந்தை வாங்குவதற்கான செலவு இப்படி ஏற்படும் மேலதிகச் செலவுகள், ஏற்கனவே நாம் போட்டு வைத்த வரவு செலவுத் திட்டத்தை உடைத்தெறிந்து நம்மை ஆழ்ந்த திகைப்பில் ஆழத்தி விடுகிறது. **நண்பர்கள், உறவினர் அயல்வீட்டார் எத்தனை நாட்களுக்கு நமக்கு கை கொடுப்பார்கள்?** இதற்கு பிராயச் சித்தமாக நடந்து கொள்வதற்கு அவற்றிக்கு பிராயச்சித்தம் செய்வதற்கு நாம் எத்தனை சிரமப்பட வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள் இவ்வாறான சிரமங்களை எதிர் கொள்ள மேலான ஓரே வழி அது சிக்கனம் என்னும் சிறப்பான வழியாகும்.

ஆக்கம் :- **F.S.**ஆஞ்சலீன், பேராலயம்

ஒவ்வொரு பங்கும் பெற்றுக்கொள்ளும்
**திருமலைத்தீப பத்திரிகையின் விற்பனை விபரம் - 2013**

| இல | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 01 | பேராலயம் | 200 |
| 02 | உவர்மலை | 200 |
| 03 | பாலையூற்று | 200 |
| 04 | குவாடலூப்பே | 155 |
| 05 | சாம்பல்தீவு | 75 |
| 06 | அலஸ்தோட்டம் | 50 |
| 07 | நிலாவெளி | 50 |
| 08 | சீனன்குடா | 30 |
| 09 | மூதூர் | 30 |
| 10 | இருதயபுரம் | 30 |
| 11 | கன்னியா | 10 |
| 12 | தம்பலகாமம் | 05 |
| | மொத்தம் | **1035** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் திடீர் இராஜினாமாவும் அதன் அதிர்வலைகளும்



தொடர்ச்சி. . .

வரலாற்றில் திருத்தந்தையர்களின் இராஜினாமா, பதவி விலகல், பதவி நீக்கம்

திருச்சபையின் வரலாற்றில் சில திருத்தந்தையர்கள் பல்வேறு காரணங்களுக்காக இராஜினாமா அல்லது பதவி விலகியுள்ளார்கள். இன்னும் சிலர் வேறு பல காரணங்களுக்காக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

**01.. திருத்தந்தை தூய பொஞ்சியன்**
திருச்சபையின் வரலாற்றில் இவ்வாறு முதன்முதலாக தனது திருத்தந்தை பதவியிலிருந்து இராஜினாமா செய்து கொண்டவர் திருத்தந்தை தூய பொஞ்சியன் (Pope St. Pontian). இவர் 21.07.230ம் ஆண்டில் தூய பேதுருவின் வாரிசாக நியமிக்கப்பட்டார். உரோமைப் பேரரசன் மக்சிமியுனூஸ் தார்க்ஸ் (Maximinus Thraz) கலாபனையின் போது சர்தீனியாவிற்கு நாடுகடத்தப்பட்டு அங்கு உயிர் பிழைக்காத வகையில் உப்பளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டார். எனவே அவர் 28.09.236 (237)ம் ஆண்டில் போதிய பராமரிப்பு இன்மையினாலும் தொடர்ச்சியான சித்ரவதைகளாலும் மறைசாட்சியாக மரித்தார்.

**02.. திருத்தந்தை தூய சில்வேரியுஸ்**
மறுபக்கத்தில் 01.06.536ம் ஆண்டில் திருத்தந்தை நிலைக்கு உயர்த்தப்பட்ட திருத்தந்தை தூய சில்வேரியுஸ் (Pope St. Silverius) பலாத்காரமாக அப்பதவியிலிருந்து இறக்கப்பட்டார். மார்ச் 537ல் பசன்டைன் கொடிய பேரரசி தியோடோரா (Theodora) தன்னால் ஆயர் நிலைக்கு நியமிக்கப்பட்ட தப்பறைக் கொள்கையுடைவர்களை திருத்தந்தையவர்கள் அங்கீகரிக்காமையால் அவரைக் கைது செய்து, உரோமையிலிருந்து விலக்கினார். அத்துடன் அவர் பல்மரியா (Palmaria) தீவிற்கு நாடுகடத்தப்பட்டு அங்கே 11.11.537ல் சாகும் வரையிலும் இருந்தார்.

**03.. திருதந்தை தூய 1ம் மார்த்தீன்**
அடுத்து மேற்சொல்லியவாறான ஒருநிலையே திருதந்தை தூய 1ம் மார்த்தீனுக்கும் (Pope St. Martin I) ஏற்பட்டது. இவர் யூலை 649ல் திருத்தந்தையாக திருநிலைப்படுத்தப் பட்டார். இவர் பசன்டைன் பேரரசன் ஒரே இறைக்கொள்கைக்கு எதிரான பேதகத்தை ஊக்குவிக்கும் தப்பறைப்போதனை ஆயர்களை நியமிக்கும் முயற்சிகளை மேற்கொண்டபோது எதிர்த்தார். இதனால் பேரரசன் இவரைக் கைதுசெய்து கொன்ஸ்தாந்தின் நோபிளுக்கு கொண்டுசென்று, பதவியிறக்கி தீர்ப்பிட்டு நாடுகடத்தினான். இவர் போதிய பராமரிப்பு இன்மையினாலும், கைவிடப்பட்ட நிலையினாலும் 16.09.656ல் கிறிமியா (Crimea) எனுமிடத்தில் இறந்து போனார். இவரே மறைசாட்சியாக மரித்த இறுதித் திருந்தந்தையாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**04. கறைபடிந்த திருத்தந்தையர் வரலாறு**
அடுத்து வருகின்ற சம்பவம் திருச்சபையின் திருத்தந்தையவர்கள் வரலாற்றில் கறைபடிந்த சம்பவமாகும். திருத்தந்தை 9ம் ஆசீர்வாதப்பர் (Pope Benedict IX) அவர்கள் திருத்தந்தைப் பதவியினை வரலாற்றில் மூன்று வெவ்வேறு காலப்பகுதியில் கொண்டிருந்த துர்மார்க்கத்திற்கு உரியவராவர். இவர் மிகவும் பிரபல்யம் வாய்ந்த குடும்பத்தின் உறுப்பினரும், திருத்தந்தை 8ம் ஆசீர்வாதப்பர் (Pope Benedict VIII, 1012 - 1024) திருத்தந்தை 19ம் அருளப்பர் (Pope John XIX, 1024 - 1032) ஆகியோரின் மருமகனுமாவார். இவரது தந்தை அல்பெரிக் (Alberic) தனது மகன் திருத்தந்தையாக தெரிவு செய்யப்படுவதற்காக இலஞ்சம் கொடுத்தும், ஏமாற்றியும் உரோமைக் குருக்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கினார். இவர் மிகவும் இளமையாகவும், அனுபவமற்றவராகவும், எந்தவிதமான திருச்சபைப் பின்னணியும் அற்றவராகவும் காணப்பட்டார். அநேக வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி இவரது காலமே அனைத்து திருத்தந்தையர்கள் காலத்திலும் மிகவும் மட்டமானதும், மோசமானதுமான காலப் பகுதியாகும். பல்வேறுபட்ட சீர்கேடுகள், பிழைகளின் பிற்பாடு அவரை உரோமைக் குருக்களும், மக்களும் பலாத்காரமாக பதவியிலிருந்து இறக்கி, நாட்டைவிட்டு ஓடச்செய்தனர்.

அதன்பின்பு திருத்தந்தையாக 3ம் சில்வெஸ்டர் (Pope Sylvester III) 20.01.1045ல் நியமிக்கப்பட்டார். ஆயினும் 9ம் ஆசீர்வாதப்பரும் அவரது ஆதரவாளர்களும் மீண்டும் ஒன்றுசேர்ந்து திருத்தந்தை 3ம் சில்வெஸ்டரை வெறும் இருபத்திரெண்டு (22) நாட்களில், அதாவது 10.02.1045ல் அவரது பதவியிலிருந்து இறக்கி மீண்டும் இரண்டாவது தடவையாக 10.04.1045ல் கைப்பற்றிக் கொண்டார். ஆயினும் அப்பதவியிலிருந்து வெறும் இருபத்தியொரு (21) நாட்களில் இராஜினாமா செய்துகொண்டார். அதற்குக் காரணம் அவர் போர்டா லத்தீனாவின் தலைமைக்குருவாகவிருந்த ஜோன் கிறேியன் (John Gratian) என்பவர் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட பதவி விலகினால் பெருந்தொகையான பணமும், திருமணம் புரிந்துகொள்ள பெண்ணும் வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டமையால் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அதன் பிரகாரம் 05.05.1045ல் ஜோன் கிறேஷியன் என்பவர் திருத்தந்தை 6ம் கிரகோரியாக (Pope Gregory VI) நியமிக்கப்பட்டார். ஆயினும் அவரால் வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. எனவே மனமுடைந்த 9ம் ஆசீர்வாதப்பர் மீண்டும் பதவியினை கைப்பற்ற முயற்சித்தார். இவ்வேளையில் திருச்சபையில் சீர்திருத்தத்தினை கொணர முனைந்த ஜேர்மனியைச் சார்ந்த 3ம் ஹென்றி (Henry III) மன்னன் 1046ல் "சுற்றி சங்கத்தைக்" கூட்டி (Council of Sutri) அதற்கு 9ம் ஆசீர்வாதப்பர், 3ம் சில்வெஸ்டர், 6ம் கிரகோரி ஆகியோரை அழைத்திருந்தார். இச்சங்கம் 20.12.1046ல் கூட்டப்பட்டது. அதில் 3ம் சில்வெஸ்டர், 6ம் கிரகோரி மாத்திரமே கலந்து கொண்டனர். ஆயினும் மூவருமே பதவியிலிருந்து இறக்கப்பட்டனர். அதன்பின்பு 23.12.1046ல் குருக்களாலும், மக்களாலும் திருத்தந்தை 2ம் கிளமெண்ட் (Pope Clement II) நியமிக்கப்பட்டார். திருத்தந்தை 2ம் கிளமெண்ட், 3ம் ஹென்றி மன்னனை தூய உரோமைப் பேரரசராக நியமித்தார். அத்துடன் திருச்சபையின் விசேட சலுகைகளை விற்க முற்படும் குற்றத்திற்கு உள்ளாகும் யாவரும் (Guilty of Simony) திருச்சபையிலிருந்து விலக்கப்படுவர் என்கின்ற கட்டளையும் பிறப்பித்தார். ஆயினும் ஹென்றி மன்னன் ஜேர்மனி திரும்பிய பிற்பாடு மீண்டும் 9ம் ஆசீர்வாதப்பர் தோன்றினார். 09.10.1047ல் 2ம் கிளமெண்ட் திருத்தந்தையவர்கள் 9ம் ஆசீர்வாதப்பரின் கைக்கூலிகளால் நஞ்சு ஊட்டப்பட்டு இறந்தாரென நம்பப்படுகிறது. அதன்பின்பு அவன் தன்னையே 08.11.1047ல் திருத்தந்தையாக மூன்றாவது முறையாக நியமித்துக் கொண்டான். ஆயினும் மீண்டும் ஹென்றி மன்னன் தலையிட்டு 17.07.1048ல் நிரந்தரமாக 9ம் ஆசீர்வாதப்பரை பதவியிலிருந்து அகற்றினான். அந்நாளிலேயே 2ம் டமாசுஸ் (Pope Damasus II) திருத்தந்தையாக நியமிக்கப்பட்டார்.
மூன்று தடவைகள் திருத்தந்தையாக தன்னையே ஆக்கிக்கொண்ட 9ம் ஆசீர்வாதப்பருக்கு நிகழ்ந்தது என்ன? அவர் தனது ஒய்வு காலத்தில் தனது பாவங்களுக்காக மனம் வருந்தியதோடு, உத்தியோக பூர்வமாக திருத்தந்தை பதவியிலிருந்து விலகிக்கொண்டு, தனது வாழ்வின் இறுதிநாட்களை தவச்செயல்களில் கழித்தார். இந்த வரலாற்று நிகழ்வானது கறைபடிந்ததாகவும், துயரம் நிறைந்ததாக இருந்தாலும் அதனூடாகவும் நல்லது தோன்றியது. அது யாதெனில் அவரைத்தொடர்ந்து வந்த திருத்தந்தையர்கள் திருச்சபையின் விஷேட சலுகைகளை விற்றல், குருக்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் குறித்த அதிகமான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தனர். மேலும் 1059ல் திருத்தந்தை 2ம் நிக்கலஸ் **(Pope Nicholas II)** திருத்தந்தையினை தெரிவு செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தியதுடன், கர்தினால்களே திருத்தந்தையினை தெரிவு செய்வோர் ஆவார் என்பதனை யும் அறிமுகப்படுத்தினார்.

**05.** திருத்தந்தை தூய 5ம் செலஸ்ரின் தமது பதவியினை இராஜினாமா செய்துகொண்ட இன்னுமொரு திருத்தந்தை புனித 5ம் செலஸ்ரின் (Pope St. Celestine V) ஆவார். இவர் 05.07.1294ல் தெரிவு செய்யப்பட்டு 29.08.1294ல் பதவியேற்றுக் கொண்டார். இவர் ஓர் ஆசீர்வாதப்பர் சபைத் துறவியாவார். ஒரு வனத்துறவியின் வாழ்வினை வாழ்ந்ததுடன் அவரது ஆன்மீகத்திற்காகவே போற்றப்பட்டவர். கர்தினால்களிலிருந்து புதிய திருத்தந்தையை தெரிவுசெய்ய முடியாத இறுக்க நிலையினைத் தளர்த்த அவரது 84வது வயதில் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டார். தெரிவு செய்யபட்டவுடனேயே செல்வாக்குமிக்க கர்தினால்களின் செயற்திட்டங்களுக்கு இரையானார். இவர் 13.12.1294ல் தனது பதவியினை இராஜினாமா செய்துவிட்டு தான்சார்ந்த துறவற மடத்திற்கு சென்றுவிட்டார். அவரைத்தொடர்ந்து பதவியேற்ற திருத்தந்தை 8ம் பொனிபஸ் (Pope Boniface VIII) தனது பதவிக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடாமலிருக்க திருத்தந்தை தூய செலஸ்ரினை சிறையில் அடைத்தார். அவர் 19.05.1295ல் சிறையில் இறந்தார்.

**06. திருத்தந்தை 5ம் மார்ட்டின்**
திருத்தந்தை 7ம் கிரகோரி (Pope Gregory VIII – 1406 – 1415) அவர்கள் இரண்டு எதிர்த் திருத்தந்தையர்கள் இருந்தவேளையில் உத்தியோகபூர்வ திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டார். அவிக்னொன் திருத்தந்தை, 8ம் ஆசீர்வாதப்பர் (Avignon Pope – Benedict VIII) அவர்கள் பிரான்ஸ் மன்னனால் ஆதரிக்கப்பட்டவர். பிசா திருத்தந்தை 23ம் அருளப்பர் (Pisa Pope – John XXIII) புதிதாக உருவாக்கப்பட்ட பிசா பேரவையின் உதவியாளர்களால் ஆதரிக்கப்பட்டவர். ஆயினும் அவர்கள் இருவருமே உண்மையில் திருத்தந்தையர்கள் அல்ல. இறுதியாக கொன்ஸ்ரன் திருச்சங்கத்தில் (Council of Constance) பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கத்தில் திருத்தந்தை 7ம் கிரகோரி உத்தியோகபூர்வமாக இராஜினாமா செய்து கொண்டார். 23ம் அருளப்பர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். அதன்பின் திருத்தந்தை 7ம் கிரகோரியினைத் தொடர்ந்து திருத்தந்தை 5ம் மார்ட்டின் (Pope Martin V) உத்தியோகபூர்வ திருத்தந்தையாக (1417 – 1431) தெரிவு செய்யப்பட்டார்.

**முடிவுரை**
எனவே இன்று நம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் பதவி விலகியுள்ளார் என்றால் அது அவர் தமது சுயவிருப்பத்தின் பேரில், திருச்சபையின் நலனில் அக்கறை கொண்டு அம்முடிவினை மேற்கொண்டுள்ளார். அதுகுறித்து அதிகம் கவலைப்படுவதை விடுத்து புதிய திருத்தந்தையின் தெரிவில் ஆவியானவரின் வழிகாட்டுதலுக்கும், நெறிப்படுத்தலுக்கும் தம்மை விட்டுக்கொடுக்க முழுத்திருச்சபையாக இறைவேண்டலில் ஈடுபடுவோம்.

மேலே சொல்லப்பட்ட வரலாற்றில் நாம் திருத்தந்தையர்களின் பல்வேறு பக்கங்களைப் பார்த்தோம். அதிலே பதவி விலகுதல், விலக்கப்படுதல் போன்ற பல வரலாறுகளைப் பார்த்தோம். ஆயினும் அவற்றிலிருந்து நாம் அதிகம் கற்க வேண்டியுள்ளது.

- ஒரு திருத்தந்தை தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்யும்போது அவரது இடத்தை நிரப்ப தெரிவு செய்யப்படும் புதிய திருத்தந்தையின் அதிகாரத்திற்கு பலத்த சவால்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.
- நவீன யுகத்தில் திருச்சபையானது மிகவும் வலிமைமிகுந்த தலைவர்களாகிய தூய திருத்தந்தையர்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது.
- திருச்சபையானது எந்தவிதமான அரசியல், உலகியல் தலையீடுகளின்றி தனித்துவமானதாக செயற்படும் அமைப்பாக மாறியுள்ளது.
- பாரம்பரியமாக தலைவர்கள் தெரிவு செய்யப்படும்போது அவர் களது அறிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் இன்றுள்ள தகவல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உலகமயமாக்கல் போன்றவற்றின் காரணமாக தலைமைத்துவம் அனுபவத்தின் அடிப்படையில் உருவானதொன்றாக இருக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.
- இன்றைய தலைமைத்துவம் தியானம், பயிற்சி அத்துடன் அடுத்தவரை அந்நிலைக்கு தயாரிப்பதே தவிர கட்டளையிடுதலுக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டது கிடையாது.

இந்தவகையில் முன்னாள் திருத்தந்தையின் பணி உலகின் பல்வேறு கோணங்களில் பல்வேறாக நோக்கப்பட்டாலும், அவர் வாழும்போதே தமது உடல் வலிமையின் இயலாமையை நன்கு உணர்ந்தவராக திருச்சபையின் புதிய தலைமைத்து வத்திற்கு அழைப்புவிடுத்து முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளார் என்பது கண்கூடு.

அருட்தந்தை **A. A.** நவரெட்ணம்,
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

- முற்றும் -




86வது பிறந்த நாள்
கொண்டாட்டம்

பெயர் :- சொர்ணம் அம்மா
பிறந்த திகதி :- 1928.07.09
விலாசம் :- அ.சொர்ணம்
C/o :அ.வசந்தா
No:1008
அனுராதபுர சந்தி
திருகோணமலை

தனது 86வது பிறந்தநாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

Happy birth day dear mum


அழகைப்பற்றி கனவு காணாதீர்கள்
அது உங்கள் கடமையை பாழாக்கிவிடும்
கடமையைப் பற்றி அழகு காணுங்கள்
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

சிரிக்கின்ற நிமிடங்கள்
பொய்யாக இருக்கலாம்
அழுகின்ற நொடிகள்
நிஜமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAI COLLEAGUES
## 2013இல் இளைஞர்களே

### நண்பர்களே!

இங்க பாருங்கோவன் ஒவ்வொரு மாதமும் ஏதோ ஓர் புதிய கதையைத் தேடித் தேடி நிறைய வாசிக்க வேண்டியுள்ளது .ஆனாலும் தேடல் நிறையவே உள்ளது. இந்த மாதம் ஒரு கதையுடன் தான் வந்துள்ளேன்.

வெறுத்துப் போனான் அவன்.
வாழ்வில் ஏற்பட்ட ஒரு பெரிய சிக்கலைக் கண்டு துவண்டு, சாகப் போனான்.
குன்றின் மேல் ஏறி நின்று விழப்போனான்.

அவ்வழி வந்த பெரியவர் ஒருவர்,
அவனைத் தடுத்து நிறுத்தி விளக்கம் கேட்டார்.

கேட்டுவிட்டு சொன்னார்:

“தம்பி!
இது பிரச்சினைத்தான் நீங்கள் தாராளமாகச் சாகலாம். தடையில்லை!
அதற்கு முன் ……
எனக்காக ஒரு காரியம் செய்வீர்களா?”
தலையாட்டி நின்றவனிடம் பெரியவர் சொன்னார்.

“தம்பி!
அதோ கீழே தெரிகிறதே ஓர் அடர்ந்த காடு.
அதை ஒரு முறை எனக்காக சுற்றி வருவாயா?
எப்போது திரும்பி வருவாய்?”

“அது பெரிய காடு போல் தெரிகிறதே!
சுற்றி வர மூன்று நாட்களாவது ஆகுமே!
சரி வருகிறேன்.”

சென்றவன் அதே நாளில் திரும்பி வந்து நின்றான்.

“என்ன தம்பி இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாய்?”

“ஐயா,
அது ஒன்றும் நான் சொன்னது போல் பெரிய காடு இல்லை.
இங்கிருந்து பார்க்கத் தான் அப்படித் தெரிகிறது. சுமார் நூறு மரங்கள் தான் அங்கு இருக்கும்.”

கேட்டவுடன் பொக்கை வாய் திறந்தார் தாத்தா:

“அதே போல் தான் உன் பிரச்சினையும். பார்க்கப் பெரியதாகத் தோன்றும் ஒன்று.
அருகே சென்று பார்த்தால் சிறிதாகி விடும். இதை புரிந்து கொண்டால் சரி. இப்போது நீ சாகலாம்.”

சாவைக் கைவிட்டவன்,
வாழ்வைக் கைப்பற்றினான்.

இன்றைய நமது வாழ்வும் ஏதோ ஓர் பிரச்சினைக் குள் சிக்கியுள்ளது நாம் அறிந்த ஒன்று.

ஆனால்,
எமது பிரச்சினை எமக்குப் பெரிதாகத் தோன்றி எம் மனங்களை சிறிதாக்கி விடுகிறது.

பிரச்சினை இல்லாத வாழ்வு எப்பிடி இருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன்.

அது உப்பில்லாத சாப்பாடு போல் இருக்கும் என்று நான் சொல்கின்றேன். வாழ்க்கையில் பிரச்சினைகள் வரத் தான் வேண்டும்.

ஆனால்,

நாம் பிரச்சினைகளால் துவண்டு விடாமல் வாழும் போது தான் அங்கே மகிழ்ச்சி உண்டாகும். பிரச்சினை இல்லாத வாழ்வு வேண்டுமென்று நிம்மதியைத் தேடி நாம் எங்கு அலைந்து திரிந்தாலும் எமக்கு நிம்மதி கிடைத்து விடாது. காரணம் எமது பிரச்சினைகளை நாம் பெரியதாக எடுத்து விடுகின்றோம். இன்றைய பிரச்சினை நாளை மறைந்து விடும்.

எனவே, பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்போம். வெற்றி கொள்வோம்.

இத்தோடு இன்னொன்றும் கூற வேண்டும்.
வாழ்க்கையில் பிரச்சினைகள் வரத்தான் வேண்டும்.
ஆனால் பிரச்சினையே வாழ்க்கையாகி விட்டால்…..
இந்தக் கூற்றைப் பலர் என்னிடம் கூறியதற்கு எனக்கு பதிலே கிடைக்கவில்லை.

உங்களுக்கு ஏதாவது பதில் தெரிகின்றதா?

**நன்றி**
**கியூரி.க. - உவர்மலை.**

## எகெட் நிறுவனத்திற்கு பங்குகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தவக்கால நிதிவிபரம் ~ 2013

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01 | தூய குவாடலூப்பே அன்னை திருத்தலம் ,சின்னக்கடை | 20,000.00 |
| 02 | தூய குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை. | 12,500.00 |
| 03 | தூய லூர்த்து அன்னை ஆலயம், பாலையூற்று. | 12000.00 |
| 04 | இறையிரக்க ஆலயம், அலஸ்தோட்டம் | 12000.00 |
| 05 | தூய மரியாள் பேராலயம் | 12000.00 |
| 06 | திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம் | 7000.00 |
| 07 | தூய சூசையப்பர் ஆலயம்,நிலாவெளி. | 5000.00 |
| 08 | தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் | 4000.00 |
| 09 | தூய சதா சகாய மாதா ஆலயம், கந்தளாய். | 650.00 |
| | **மொத்தம்** | **85150.00** |

### முடிவில்லா வாழ்வில் துயில் கொள்ளல்

விண்ணக வாழ்வில்
15 வருடங்கள்
திரு. எரிக் எல்டன்
மறைவு : 23.1.1998



விண்ணக வாழ்வில்
3வருடம்
திருமதி. கிறிஸ்டினா
போச்சுன் எல்டன்
மறைவு : 23.05.2010

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது
ஆண்டவரே நான் உண்மையாகவே உம் ஊழியன் நான் உம் பணியாளன் (திபா)

1ம் ஒழுங்கை
பாரதிபுரம்
திருகோணமலை

**என்றும் மாறாத அன்பு**
**நினைவுகளுடன் பிள்ளைகள்,பேரப் பிள்ளைகள்**

## திருகோணமலை மறை மாநில செய்திகள்

### ஆயர்த்தருவ வாழ்வில் 30 வருடங்கள்

தமது ஆயர்த்தருவ வாழ்வில் 30 வருடங்களை 07.05.2013 அன்று எமது மறைமாவட்ட ஆயர் அதி. வண. யோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பூர்த்தி செய்தார். மேலும் திருகோணமலை ஆயர் இல்லத்தில் மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்களோடு இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். ஆயரின் பணி சிறக்க தொடர்ந்தும் மன்றாடுவோம்.

### குருத்து வாழ்வில் 25 வருடம்

அருட்தந்தை ஆஞ்சலோ பொன்னையா (யே.ச) தனது குருத்து வழ்வில் வெள்ளிவிழாவை 30.04.2013 அன்று திருகோணமலை ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட குருக்களோடு இணைந்து சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அவருடைய பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

### Fr. B.A. யோசப் அடிகளார் இறைபதம் அடைந்தார்

அருட்தந்தை **Fr.B.A.**யோசப் அடிகளார் 23.04.2013 அன்று இறைபதம் அடைந்தார். தனது 30 வருட குருத்துவ வாழ்விலே திருகோணமலை,மட்டக்களப்பு மறைமாவட்டங்களில் பல இடங்களில் பணிபுரிந்தவர். இவர் உவர்மலை பங்கை பிறப்பிடமாக கொண்டு, இறுதியாக சாம்பல்தீவு பங்கில் பணியாற்றி இறைபதம் அடைந்த அடிகாளார், நித்திய இளைப்பாற்றி அடையவும், அடிகளாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### பாலையூற்று லூர்த்து அன்னையின் வருடாந்த திருவிழா

பாலையூற்று, லூர்த்து அன்னை திருத்தலத்தின் வருடாந்த திருவிழா, 26.05. 2013 அன்று, எமது மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கொண்டாடப்பட்டது. O.M.I குருக்கள் நாவநாட் காலங்களில் மறையுரையாற்றினார்கள். பல இடங்களிலும் இருந்து பக்தர்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். **“மரியே வாழ்க”**

### மாபெரும் பெந்தகோஸ்து திருவிழிப்பு ஆராதனை

மாபெரும் பெந்தகோஸ்து திருவிழிப்பு ஆராதனை 18.05.2013 அன்று மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை தூய குவாடலூப்பே அன்னைத் திருத்தலத்தில் நடைபெற்றது திருவிழப்பு திருப்பலியை மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருட்பணி நோயல் இம்மானுவேல் தலைமையில் மறைமாவட்ட குருக்களுடன் இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருவிழிப்பு ஆராதனைக்கு சகல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் கத்தோலிக்க அருங்கொடை இயக்கம் தம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

### தேசிய சிறிய கிறீஸ்தவ குழு ஒன்றுகூடல் - 2013

2013ம் ஆண்டிற்கான இரண்டாவது தேசிய சிறிய கிறீஸ்வத குழும ஒன்றுகூடல் சித்திரை மாதம் 15-17 ஆம் திகதிகளில் கண்டி மறைமரவட்டத்தின் அம்பிடிய என்ற பகுதியில் அமைந்துள்ள “Claret Nivasa” என்ற இடத்தில் திருகோணமலை மறைமாநில ஆயுர் அதிவந்தணைக்குரிய கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் 15ம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பச் செபத்துடன் ஆரம்பமானது.

இந்த 3 நாள் கலந்துரையாடலின் போது 7 படி முறை நற்செய்திப் பகிர்வோடு, இன்னும் 2 புதிய நற்செய்திப் பகிர்வு முறைகள் அறிமுகம் செய்யப்பட்டமை விஷேட அம்சமாகும். **அன்பிய திருச்சபையே எம் எதிர்கால திருச்சபை.**

### இறை இரக்க திருவிழா – 2013

திருகோணமலை அலஸ்தோட்டத்தில் அமைந்துள்ள இறை இரக்க திருத்தல திருவிழா 07.04.2013 அன்று திருகோணமலை மறைமானில ஆயர் அதிவந்தனைக்குரிய ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட குருக்களுடன் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் முதல்நன்மை, உறுதிப்பூசுதல் திருவருட்சதானங்கள் வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும். **I trust in you Jesus**

### சீனக்குடா கல்வாரி யாத்திரை

1973ம் ஆண்டு அருட்பணி ஜோசப்மேரி (SJ) அடிகளாரது முயற்சியினால், அப்போது இருந்த கிராம சேவகர் திரு.வஹாப் என்பவருடைய அனுமதியுடன், சீனக்குடா கல்வாரி ஸ்தலங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. 1998ம் ஆண்டு தனது வெள்ளி விழாவையும், 2013ம் ஆண்டு நாற்பதாவது வருடத்தையும் பூர்த்தி செய்தது. மேலும் இவ் வருடம் 23.03.2013 அன்று மறைமாவட்ட ஆயரின் தலைமையில் இறை பக்தர்கள் ஒன்று கூட திருச்சிலுவைப்பாதை யாத்திரையும் இறுதியில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் இக்கல்வாரி யாத்திரை சிறப்பாக அமைய நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திபேறு பெற்ற மறைசாட்சி
# தேவசகாயம்பிள்ளை [1712-1752]

தொடர்ச்சி.........



அவருடைய மனைவியார் ஞானப்பூ என்ற பார்கவி அம்மா கணவரை வந்து சந்தித்ததாக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

தம்முடைய மனைவிக்கு அன்பான ஆறுதல் தரும் வார்த்தைகளைச் சொல்லி இயேசுவுக்கு பிரமாணிக்கமாய் இருக்க அறிவுரை கூறினார்.
தேவசகாயம் மறைசாட்சியானார்

மக்களுக்கு தெரியாத வண்ணம் நள்ளிரவில் காவலர்கள் அவரை சுட்டுக் கொன்றனர் 1752 ஜனவரி 14ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று தேவசகாயத்தை ஒரு உயர்ந்த பாறையின் மேல் தூக்கி நிறுத்தி மூன்று வீரர்கள் மூன்று துப்பாக்கிகளால் சுட்டனர் மூன்று வெடிகளும் இலக்கு மாறாமல் அவரின் உடலில் பாய்ந்தன குற்றுயிராய் பாறையின் கீழ் விழுந்தார் இன்னும் உயிர் உள்ளது எனக்கண்ட படைவீரர்கள் இரு துப்பாக்கிகளில் ரவை போட்டு அவரது நெஞ்சுக்கு நேரே சுட்டனர்.

இது மறைசாட்சியின் வாழ்வில் இறுதி வெற்றிச் சின்னமாக அவரது பரலோக பயணத்தின் வணக்கமுடன் நடத்தின வரவேற்பாக இருந்தது. இவ்வாறு மறைசாட்சியான தேவசகாயம் பிள்ளை இயேசு கிறிஸ்துவைப் போன்று ஐந்து காயமகிமையோடு மறைசாட்சி மகுடம் பெற்றார்.

இந்த பவனியின் முக்கிய இரண்டு இடங்களை நாம் குறிப்பிடுவது அவசியம் :

1. புலியூர்குறிச்சி காட்டில் உள்ள ஒரு பாறையில் உட்கார வைத்தனர் கருஞ்சூரை முள் கொண்டு அடித்ததால் உடல் முழுவதும் இரத்தக்காயம் காயங்களில் மிளகு அரைத்து பூசியதால் வேதனை, மிகுந்த தாகம், தாகம் தீர்க்க கொஞ்சம் தண்ணீர் கேட்டார். காவலர்கள் குப்பைகள் கிடந்த இடத்தில் இருந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொடுக்க அதையும் மகிழ்ச்சியுடன் வாங்கிக் குடித்தார். தாகம் தீரவில்லை. எனவே இன்னும் கொஞ்சம் தண்ணீர் கேட்டார் ஆனால் காவலர்கள் கோபம் கொண்டு அவரை அடித்து உதைத்து பாறையில் தள்ளினர் பாறைமேல் விழுந்தவர் சமாரிய பெண்ணிடம் குடிக்க தண்ணீர் கேட்ட நீர் என்னைக் கைவிடுவீரா? என்று சொல்லி இயேசுவிடம் ஜெபித்தவர், கைமுட்டை மடக்கி பாறையில் இடித்தார் அங்கே தூய தண்ணீர் ஓடத் தொடங்கியது. அந்த தண்ணீரைக் குடித்து திருப்தி அடைந்தார். இந்த இடத்தில் இன்றுவரை வற்றாத ஒரு ஊற்று உள்ளது இதற்கு முட்டிடிச்சான் பாறை என்று பெயர்.

2. வழியில் பெருவிளையில் அவருடைய அனுபவங்கள் இங்கே தேவசகாயம் ஏழு மாதங்கள் செலவிட்டார். இந்த பகுதியில் கிறிஸ்துவர்கள் அதிகம்பேர் வாழ்ந்தார்கள் இங்கேதான் தேவசகாயத்தின் முன்மாதிரியை கண்டு சலவை தொழிலாளர் வகுப்பினர் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் ஆனார்கள் சாதிக் கொடுமையில் இருந்து தப்ப கிறிஸ்தவம் தழுவுவது நல்லதோர் வழி என இவர்கள் கருதினர். பெருவிளையில் ஏழு மாதங்கள் ஒரு வேப்ப மரத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தார் அம்மரம் நின்ற இடத்தில் இன்று புதிய கன்று ஒன்று வளர்ந்து வருகிறது இதன் இலையை நோய் தீர்க்கும் மருந்தாக பக்தர்கள் உண்டு வருகின்றனர்.

### சிலுவைப்பாதையின் இறுதி மணித்துளிகள்

ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் அவமானப்பவனியின் இறுதி மணித்துளிகள் தேவசகாயம் பிள்ளையின் மகிமையின் நேரமாக நிறைவேறியது இயேசுவின் பகிரங்க வாழ்க்கை கானாவூரில் தொடங்கி மூன்று ஆண்டுகள் பவனியாக கல்வாரி மலையில் மகிமையில் முடிந்தது. அதைப்போலவே தேவ சகாயம் பிள்ளையின் சிறைவாழ்வு மூன்று ஆண்டுகளாக நீடித்து காற்றாடி மலையில் மகிமையில் பலியாக நிறைவேறியது காற்றாடி மலைக்கு கைதியைக் கொண்டு சேர்த்த பொழுது கூட்டமாக வந்த மக்களை அடக்க முடியவில்லை எனவே அவரை சீக்கிரம் தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர் இதற்கிடையில்

### புனித சவேரியார் ஆலயத்திற்குள் அடக்கம்

தேவசகாயம் பிள்ளை சுட்டுக் கொல்லப் பட்டார் என்ற செய்தியை அறிந்த வடக் கன் குளம் அருள்தந்தை மதுரேந்திர சுவாமி அவர்கள் தேவசகாயம் பிள்ளை யின் திருஉடலை வடக்கன் குளத்திற்கு கொண்டு செல்ல முனைந்தார் ஆனால் அது அவருக்கு கிடைக்கவில்லை. ஆனால் அவ்வேளை யில் கோட்டாறு பங்குத் தந்தை பெற்றுக் கொண்டு தூய பிரான்சிஸ் சவேரியார் பேரில் உள்ள பெரிய ஆலயத்தின் பெரிய பீடத்தின் முன் மிகுந்த பக்தி வணக்கத்துடன் அடக்கம் செய்தார். அப்போது திருவிதாங்கூர் கொச்சி நகரில் வாழ்ந்த ஆயர் தேவச காயம் பிள்ளை மறைசாட்சியாக மரணம் அடைந்ததைக் கேள்வியுற்று நன்றி கீதம்பாடி திருப்பலி நிறைவேற்றினார். அப்பொழுதே கொச்சி ஆயர் 1756ல் உரோமை தலைமை பீடத்திற்கு தேவ சகாயத்தின் மறைசாட்சி மரணத்தைப் பற்றி எழுதி அனுப்பினார்.

முத்திபேறு பெற்ற மறைசாட்சி தேவச காயம் பிள்ளையின் சாட்சியும் வேண்டு தலும் இந்திய தேசத்தை இயேசுவின் பாதையில் நடத்திச் செல்வதாக.

முற்றும்....

**நன்றி: இயேசு ஆண்டவர் நம் மீட்பர்**

## உம்மைத் தேடி வந்தேனையா... என்னையும் ஏற்றுக்கொள் நாதா...

உள்ளத்தின் ஆழத்தில் உம்மை ஏற்றேன் - இறைவா
எனக்கேதும் குறையில்லையே...
உலக ஆசைகள் குப்பையென்றே நானும்
உம்மைத் தேடி வந்தேனையா...

இம்மட்டும் செய்த தவறுகளை எண்ணி
உள்ளம் நொந்து அழுகின்றேன்...
இதயம் திறந்து காத்திருக்கின்றேன்
கிருபை செய்தருளும் தயாபரனே...

என் இதயத்தில் வாழும் என் ஆயனே
என் வாழ்வை மாற்றினீரே...
காணாமல் போன என் வாழ்வை
கண்டேனும் உயிருள்ள வார்த்தையில்...

கண்ணீரோடு செபித்து வாழவே
கற்றுத்தாங்க எனது இயேசுவே...
கருத்தாய் நாளும் நான் செபிக்கவே
கரம் பிடித்து நடத்தி ஆளுமே...

உம் சாயலாய் என்னைப் படைத்தீரே
உம் கரத்தில் என்னைப் பொறித்தீரே
உம்மைத் தேடி வந்த என்னை
ஏற்றுக்கொள்ளும் நாதனே...

**டிலானி, பேராலயம்**

## தீபம்

திருமலையில் ஏற்றப்பட்ட
திருமலைத் தீபமே
நீ சுடர் விட்டுப் பிரகாசிக்க
நானும் எண்ணையாகி
உயிர் தர ஆசைப்படுகின்றேன்.

S.ஜோன் கில்பேட்
உவர்மலை


---

உன்னால் உன் எதிர் காலத்தை
மாற்ற முடியாவிட்டாலும்
உன் பழக்கத்தை மாற்றலாம்
உன் பழக்கம்
உன் எதிர்காலத்தை மாற்றும்.

---

முடியும் என்றால்
முயற்சி செய்
முடியாது என்றால்
பயிற்சி செய்

## மாதம் ஒரு திருப்பாடல் (சங்கீதம்)
## திருப்பாடல் – 2
## இருவழிகள்




**1. பின்னணியாக.**

தனி மனிதருக்கு முன் அமைந்துள்ள இரு வழிகள் பற்றி முதல் திருப்பா குறிப்பிடுகிறதென்றால், நாடுகளை அல்லது அரசுகளை எதிர்நோக்கியுள்ள இருவழிகள் பற்றி இரண்டாம் திருப்பா எடுத்துரைக்கிறது எனலாம். தாவீது பாடியதே இத்திருப்பா என்று திருத்தூதர் பணிநூல் கூறினும் (காண். திப 4: 25). இறைவனின் நெறிமுறைகளுக்கேற்பத் தம்மை ஆண்டு நடத்திய அரசர் ஒருவரின் முடியேற்பு விழாவிலே இஸ்ரயேலர் பாடிய பாடலாக இதைக்கொள்ளலாம்.

கி.மு. 587க்குப் பின் தாவீதின் வழித்தோன்றல்கள் அனைவரும் அழிந்துபட்ட நிலையில், இத்திருப்பாவின் எதிர்நோக்குத் தன்மையும் நம்பிக்கையும் வளர்ச்சியுறுகின்றன. ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசையோ, அரசரையோ இப்பாடல் ஏத்திப் புகழ்ந்தது என்பதோடுகூட, தாவீதுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குறுதிகள் (காண்: 2சாமு 7: 12-14, 1குறி 17: 11-14) நிறைவேற இருக்கும் இறையரசையும், 'மெசியா'' - கிறிஸ்து அரசரையும் இது வாழ்த்துகிறது எனலாம். 110 ஆம் திருப்பாவிலிருந்து இத்திருப்பா தோன்றியிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. இரண்டும் 'மெசியா பற்றிய திருப்பாக்கள்'' என்பது குறிப்பிடத்தக்கது.

யூத ராபிகள் இப்பாடலுக்குப் பல்வேறு பின்னணிகளைத் தருகின்றனர். பெலிஸ்தியர் தாவீதுக்கு எதிராகப் போரிட்டெழுந்த சூழலை (காண். 2சாமு 5), அல்லது அம்மோனியரும் சிரியரும் தாவீதை எதிர்த்து நின்ற சூழலை (2சாமு 10), அல்லது ஆகாசுக்கு எதிராக இரட்சின், பெக்கா ஆகிய இரு அரசரும் போர்தொடுத்த சூழலை (எசா 7) அல்லது சாலமோனை மையமாக வைத்து இப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம் என்பர் இன்னோர். ஒரு குறிப்பிட்ட காலம், இடம், நபர், பின்னணி ஆகியவற்றைக் கடந்து, நம் எதிர்பார்ப்புகளின் நிறைவான உண்மை அரசர் கிறிஸ்துவையே சுட்டும். எனவே தான், இயேசுவின் திருமுழுக்கின்போதும் (லூக் 3: 22), அவர் உருமாறிய வேளையிலும் (மாற் 9: 7), 'நீரே என் மைந்தர்'' (திபா 2: 7) என்ற சொற்கள் இயேசுவின் மேல் ஏற்றிக் கூறப்படுகின்றன. இப்பாடலின் முதல் பகுதி (திபா 2: 1-2) இயேசுவுக்கு எதிராகச் செயலாற்றிய பகைவர்கள் மீது ஏற்றிச் சொல்லப்படுகிறது (திப 4: 25-26). பவுல் அடியாரும் தந்தைக் கடவுள் தம் மகன் கிறிஸ்து இயேசுவை அரசராக்கியதை இப்பாடல் மேற்கோள் காட்டி விளக்குகிறார் (காண். திபா 13: 33)

**2. பொருள்விளங்க:**

**1. வேற்றினத்தார்... மக்களினங்கள்:** நேர்முக இணையணி முறையிலே இவை பிறவினத்தார் அனைவரையும் குறிக்கும். அரசரை எதிர்த்தவர் அவரைத் திருநிலைப்படுத்திய ஆண்டவரையே எதிர்த்தனர் எனலாம்.

**2. பூவுலகின் அரசர்... ஆள்வோர்:** இங்கும் இணையணி முறை பின்பற்றப்படுகிறது. அனைத்து எதிரி அரசர்களையும் இவை சுட்டும் (காண். திபா 76: 12, 102: 15, 148: 11).

**அருள்பொழிவு பெற்றவர்:** அரசராகத் திருநிலைப்படுத்தப்பட்டவர். 'மசிகா'' என்ற எபிரேயச் சொல்லுக்குத் திரு எண்ணெய்யால் பொழிவு (அபிஷேகம்) செய்யப்பட்டவர், திருநிலைப்படுத்தப்பட்டவர் என்பது பொருளாகும். இச்சொல் கிரேக்கத்தில் 'மெசியாஸ்''

அல்லது 'கிறிஸ்தோஸ்'' என்றும் தமிழில் மெசியா அல்லது கிறிஸ்து. கிறித்து என்றும் அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலின் அரசர்கள் அருள்பொழிவு பெற்றுத் திருநிலைப்படுத்தப் பட்டார்கள் எனபது குறிப்பிடத்தக்கது (1சாமு 10: 1, 16: 3, 1அர 1: 39).

**3. தளைகள்...கண்ணிகள்:** இங்கும் இணையணி முறையிலே இரண்டு சொற்களும் எதிரிகளின் அடிமை நிலையைச் சுட்டுகின்றன.

4. விண்ணுலகில் வீற்றிருப்பவர்... என் தலைவர்: ஆண்டவர், அவருடைய ஆட்பேறான அரசர். விண்ணுலக அரியணை ஆண்டவருக்கே உரியது (திபா 11: 4, 103: 19). அரசருக்கும் அந்த அரியணையில் உரிமை கொண்டாடப்படுகிறது. 'யாவே'' என்ற சொல் இங்கு 'தலைவர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**4-5. நகைக்கிறார்... ஏளனம் செய்கிறார்...கலங்கடிக்கிறார்:** ஆண்டவர் எதிரிகளைத் தாக்குவது படிப்படியாக உயர்த்திக் கூறப்படுதலைக் காண்க.

4-6. நேர்மையான கிறித்துவ வாழ்வு வாழ விரும்புவோருக்கு எப்போதும் சில ஏரோதுகள், பிலாத்துகள், அரசர்கள், தலைவர்கள், எதிரிகளாய் அமைவர். ஏன், சாத்தானும் சிலவேளைகளில் அவர்களது உற்றார், உறவினர், சுயநலம் முதலியவும் இவர்களை எதிர்த்து நிற்பர் என்பார் மார்ட்டின் லூதர்.

**6. என் திருமலையாகிய சீயோன்:** மோசே இறைவனை எதிர்ப்பட்டு, சட்டங்களைப் பெற்ற **சீனாய் மலையே** (விப 3: 1, 24: 12-18 இச 33: 2) முதன் முதலில் **ஆண்டவரின் மலை** என அழைக்கப்பட்டது. பின்னர், சாலமோன் சீயோன் மலையில் திருக்கோயில் கட்டியபின் (2சாமு 5: 7-9) **சீயோன் மலையே** புனித மலை, **ஆண்டவரின் மலை,** ஆண்டவரின் (என்) உறைவிடம் என அழைக்கப்பட்டது (திபா 65: 1, 132: 13). இங்கு எருசலேம் நகர் சீயோன் எனக் குறிப்பிடப்படுகிறது (எசா 10: 24, எரே 3: 14).

**7. ஆண்டவர் ஆணையிட்டு உரைத்தது:** 'நான் அவனுக்குத் தந்தையாக இருப்பேன், அவன் எனக்கு மகனாக இருப்பான்'' (2சாமு 7: 14, 1குறி 17: 13) என்று இறைவாக்கினர் நாத்தான் வழி ஆண்டவர் தாவீதுக்கு உரைத்தது.

**நீர் என் மைந்தர் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்:** 'இன்று'' என்பது அரசரின் முடிசூட்டு விழாவைக் குறிக்கும். 'பெற்றெடுத்தேன்'' என்பது ஆண்டவர் அரசரைத் தம் பிள்ளையாகத் தத்து எடுத்ததைச் சுட்டும். இயேசுவை உயிர்ப்பித்து, விண்ணுக்கும் மண்ணுக்கும் அவரைத் தந்தையாகிய இறைவன் அரசர் ஆக்கியதைப் பு.ஏ. இவ்வசனம் வழி வெளிப்படுத்துகிறது (காண். உரோ 1: 4 திப 13: 33)

10-12. இவ்வசனங்களில் ஆண்டவர்க்கும் அவர் அருள்பொழிவு பெற்றுள்ள அரசருக்கும் பணிந்து நடக்க எதிரிகளுக்கு அழைப்புவிடப்படுகிறது. 'விவேகமாக நடப்பது'' என்பது

ஆண்டவரை வழிபட்டு அவருக்கு அடிபணிந்து நடப்பதாகும். ஆண்டவருக்கு அஞ்சி (கீழ்ப்படிந்து) நடப்பதே ஞானத்தின் தொடக்கம் (நீமொ 15: 33, 16: 66) முதலிய) என்று கூறிப் புறவினத்தார் யாவே வணக்கத்திற்கு மனம் மாறிவர அழைக்கப்படுகின்றனர். '**முத்தமிடுதல்**'' என்பது வணக்கம் செலுத்துதலைக் குறிக்கும் (1சாமு 10: 1, 1அர 19: 18, ஓசே 13: 2). 'அவரது சினம்'': ஆண்டவரது கோபம் (காண். 2: 5), ஆண்டவருக்கு மன்னுருபு ஏற்றிக் கூறப்படுகிறது. ஏனெனில் கடவுள் நீதியுள்ளவரேயொழிய கோபப்படுபவரல்லர்.

**3. செபித்து வாழ:**

மனிதரின் மனமாற்றம் இறைவனின் கொடை. அவரே தீய சக்தி அனைத்தையும் அடிமைப்படுத்தி வெற்றி காண்பவர். இம்மனமாற்றம் அடைய, அதன்வழி நம்மிலே இறையரசு மலர (மாற் 1: 15) இறைவனிடமே வேண்டுவோம்.

மேலும், இறையரசுக்கு எதிராக எச்சக்தியும் தலைதூக்க இயலாது (மத் 16: 18-19). வெளி உலகப் பகைவர்கள், ஆன்மீகத்திற்கடுத்த தீய சக்திகள் இதுகாறும் இறைவனை எதிர்த்து வென்றதும் கிடையாது. இனி வெல்வதும் இயலாது. இறுதி வெற்றி ஆண்டவரது 'மெசியா''வான கிறிஸ்துவுக்கே. ஒன்றிலே நாம் தாழ்ந்து அவருக்குப் பணிபுரியலாம். அப்போது வெற்றி நமதே (6-7) அல்லது, எதிர்த்துப் போரிடலாம். அப்போது அழிவு நம்மைத் திண்ணமாகப் பின்தொடரும் (9-12). எவ்வழி செல்வோம் நாம்? 'எத்தனை நாள் இருமனத்தோராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர் தாம் கடவுள் என்றால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால்தான் கடவுள் என்றால் அவன் பின்னே செல்லுங்கள்'' (அர 18: 21) என்ற கூற்றை மனதில் வைத்து, ஆண்டவா, 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்போத்து நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய்'' (திருவாசகம்) என வேண்டுவோம்.

**4. நினைவில் நிறுத்த:**

'நீர் என் மைந்தர். இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்'' (17).

'ஆண்டவர்முன் அகமகிழுங்கள்'' (11).

**நன்றி :– திருப்பாடல் புத்தகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கம்

## கிறிஸ்தவ நாகரீகம்

**க.பொ.த (உ/த) வினா விடை – தூய ஆவியின் வருகையும் திருச்சபையின் ஆரம்பமும்**

1. பெந்தகோஸ்தே தினத்தன்று மேல் மாடி அறையில் கூடியிருந்த சீடர்கள் எத்தனை பேர்?
   120 பேர்
2. யூத மதத்திலுள்ள முக்கிய திருவிழாக்கள் எத்தனை? அவை எவை?
   03
   அவை?
   1. பாஸ்கா விழா அல்லது கடத்தல் விழா,
   2. கூடாரத்திருவிழா,
   3. வாரங்களின் விழா
3. அறுவடையின் ஆரம்ப விழாவாக கொண்டாடப்பட்ட விழா எது?
   பாஸ்காவிழா
4. அறுவடையின் முடிவு விழாவாகக் கொண்டாடப்பட்ட விழா எது?
   வாரங்களின் விழா
5. இஸ்ராயேலர் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை நினைவு கூறும் விழா எது?
   பாஸ்கு விழா
6. பாஸ்காவிழாவிற்கு பின்வரும் 50வது நாள் கொண்டாடப்படும் விழா எது?
   வாரங்களின் விழா அல்லது பெந்தகோஸ்து விழா
7. சீனாய் மலை உடன்படிக்கையை நினைவு கூறும் நாள் எது?
   பெந்தகோஸ்து நாள்
8. இறைவன் மோசேயிடம் 10 கட்டளையை அளித்த நாளாக கொண்டாடப்பட்ட நாள் எது?
   பெந்தகோஸ்து நாள்
9. உலகெங்கும் சிதறுண்டு வாழும் யூதர்கள் ஜெருசலேமில் ஒன்று கூடும் திருவிழா எது?
   பெந்தகோஸ்தே திருவிழா
10. பெந்தகோஸ்தே விழாவின் போது ஜெருசலேமில் ஒன்று கூடிய யூத இனத்தவர்களைத் தருக( சிதறுண்டு போன யூதர்கள்)
    பார்த்தர்,மேதியர்,எலாமியர்,மொசப்பத்தேமியர,யூதேயா,கப்பதோக்கியா,போந்து,ஆசியநாடுகளில் வாழுகிறவர்கள், பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சீரேன் நகரை அடுத்த லிபியா, உரோமையர்கள், கிரேக்கர், அரேபியர்.
11. திருச்சபை பிறந்த தினம்?
    பெந்தகோஸ்தேதினம்
12. தூய ஆவியைப் பெற்று திருமுழுக்குப் பெற்றவர்களை எவ்வாறு அழைத்தனர்?
    புதிய இறைமக்கள் சமூகம்,புதிய இஸ்ராயேல்,புதியதேர்ந்தெடுக்கப்பட்ட இனம்
13. பழைய ஏற்பாட்டில் ஆசிரியர் சீனாய் மலையில் இறைமாட்சியை விபரிக்க பயன்படுத்திய சொற்கள் எவை?
    கொடுங்காற்று, நெருப்பு
14. தூய ஆவி இறைவன் என்பதை திருத்தூதர்பணி நூலின் ஆசிரியர் எவ்வாறு காட்டமுனைகின்றார்?
    கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல்,நெருப்புப் போன்ற பிளவுற்றநாவுகள்.
15. இறுதிக் காலத்தில் தூய்மையின் அடையாளம் எது?
    நெருப்பு
16. "காற்றுவீசுதல்"எதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது?
    ஆவியை, புதியசக்தியை
17. பெந்தகோஸ்து நிகழ்வின் தனிச் சிறப்பு என்ன?
    தூய ஆவி அனைவர் மேலும் வந்து இறங்கியது.
18. இறைவாக்கினர் யோவேல் தூய ஆவியின் வருகையைக் குறித்து முன்னறிவித்த விடயம் என்ன?
    இறுதிநாளில் எல்லோர் மேலும் என் ஆவியைப் பொழிவேன்.(யோவே.2:28 – 32)
19. தூயஆவியின் வருகை எமக்கு நினைவூட்டுவது எதனை?
    சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்ததை
20. இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதற்கான வெளி அடையாளங்கள் எவை?
    - படிப்பறிவில்லாத கலிலேயர்(சீடர்கள்) அயல் மொழிகளில் பேசத்தொடங்கியது
    - அயல் மொழிகளில் பேசப்பட்டதை மற்றவர்கள் தத்தம் மொழிகளில் கேட்டனர்
    - பயந்து ஒழிந்த சீடர்கள் துணிந்து போதிக்கத் தொடங்கியமை
21. சீடர்கள் பலமொழியில் பேசிய நிகழ்வு பழைய ஏற்பாட்டின் எந்த நிகழ்வை நினைவுபடுத்துகின்றது?
    பாபேல் கோபுரநிகழ்வை
22. சீடர்கள் அயல் மொழியில் பேசியது எதனை எடுத்துக் காட்டுகின்றது?
    சீடர்களின் பணி அகில மெங்கும் தேவையென்பதை
23. சீடர்கள் தூய ஆவியின் கொடைகளை நிறைவாகப் பெற்றிருப்பதை எவ்வாறு காட்டப்பட்டிருக்கின்றது?
    - ஒழிந்திருந்தசீடர்கள் வெளியேவந்தது
    - அனைத்துலகில் இருந்து வந்த அத்தனைமக்கள் மத்தியிலும் துணிவாகப் பேசியது.
24. கிறிஸ்துவின் பாஸ்கா உச்ச நிலையை அடையும் சந்தர்ப்பம் ?
    பெந்தகோஸ்து விழா
25. இயேசு தனது மீட்புப் பணியை எவ்வாறு முற்றுப் பெறச் செய்கிறார்?
    இறந்து உயிர்த்து இறைதந்தையின் வலதுபக்கம் உயர்த்தப்பட்டு திருத்தூதர் மீது தம் ஆவியை அனுப்பியதன் மூலம்
26. முதல் முறை அருளுரை ஆற்றிய சீடன் யார்?
    பேதுரு
27. பேதுரு தன் அருளுரையில் குறிப்பிட்ட இறைவாக்கினர் யார்?
    யோவேல்
28. "கெரிக்மா"என்றால் என்ன?
    நற்செய்தியின் முக்கிய சராம்சமும் மையக்கருத்தும்
29. பேதுருதன் உரையில் யாரால் மட்டும் எமக்கு மீட்பு என்று கூறுகிறார்?
    இயேசுவால்
30. இறைவனின் திட்டப்படியும் முன்னறிவிப்பின் படியும் நடந்தவிடயம் என்ன?
    இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு
31. பேதுரு தன் உரையில் இஸ்ராயேலருக்கு உணர்த்துவது எதனை?
    இஸ்ரேயர் செய்த இறைகொலைப் பழியை.
32. பேதுருவின் உரையால் உள்ளம் குத்துண்ட இஸ்ரேயலருக்கு பேதுரு கூறும் 3 காரியங்கள் எவை?
    - மனம் மாறுங்கள்
    - உங்கள் பாவங்களுக்காக மன்னிப்புப் பெறுவதற்காக திருமுழுக்குப் பெறுங்கள்
    - நெறிகெட்ட இத்தலைமுறையில் இருந்து விலகி வாழ்ந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்
33. பேதுருவின் முதல் உரையின் போது மனம் மாறித் திருமுழுக்குப் பெற்றவர்கள் எத்தனைபேர்? 3000 பேர்
34. பேதுரு ஆற்றிய முதல் புதுமை எது? எங்கே நடந்தது?
    ஜெருசலேம் ஆலய அழகுவாயிலில் பிறவிமுடவனைக் குணப்படுத்தியது
35. பேதுரு தனது இரண்டாவது மறையுரையை எங்கே ஆற்றினார்?
    சாலமோன் மண்டபத்தில்
36. இம் மறையுரையின் போது மனந்திரும்பிய ஆண்களின் தொகை எத்தனை?
    5000 பேர்
37. ஆதிக் கிறீஸ்தவ சமூகத்தில் காணப்பட்டசிறப்புப் பண்புகளைத் தருக?
    திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தனர்
38. "அப்பம் பிடுதல்"என்பது எதனைக் குறிக்கும் சொற்றொடர்?
    நற்கருணையை
39. ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்க்கை முறை எச் சமூகத்தின் வாழ்க்கையை ஒத்ததாக இருந்தது?
    கும்ரான் சமூகத்தை
40. ஆதித் திருச்சபையின் ஆரம்பத்தில் அறப்பணியைச் செய்தவர்கள் யார்?
    பலஸ்தீன யூத கிறீஸ்தவ பெரியோர்கள்
41. எப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்?
    அறப்பணியில் ஏற்பட்டபிரச்சினையை
42. திருத்தொண்டர்கள் எத்தனைபேர்?
    07 பேர்
43. திருச்சபையில் முதல் நியமனம் பெற்றபணியாளர்கள் யார்?
    திருத்தொண்டர்கள்
44. யூத மரபுப்படி கைகளை விரித்து செபித்தல் என்பது எதனைக் குறிக்கின்றது?
    பணிகள் கை மாறுவதையும்,அதிகாரம் அளிக்கப்படுவதையும் குறிக்கின்றது.
45. திருத்தொண்டர்கள் எந்த இனத்தவர்கள்?
    கிரேக்க மொழிபேசும் யூதர்கள்.
46. திருத்தொண்டரின் பணிஎன்ன?
    அறப்பணி
47. திருத்தொண்டர்களின் பெயர்களைத் தருக.?
    ஸ்தேவான்,பிலிப்பு,பிரக்கோர்,நிக்கானோர்,தீமோன்,பர்னபா,நிக்கொலா
48. அறப்பணிஎன்றால் என்ன?
    போதித்தல் தவிர்ந்த பணிகளான உணவு,உடை,உறையுள்,மருத்துவம் போன்ற ஏனைய பணிகள் அறப்பணிகளாகும்.

தொடரும்...

தொகுப்பு:- திருமதி. மேரி பிரகாசி ஹஸன் (ஆசிரியை)
தி/கலைமகள் மகாவித்தியாலயம்

### பெரிய வெள்ளி பங்களிப்பு – 2013

| | | |
|---|---|---|
| 1. பேராலயம் | – | 36,000.00 |
| 2. குவாடலூப்பே | – | 21,000.00 |
| 3. பாலையூற்று | – | 20,000.00 |
| 4. உவர்மலை | – | 14,927.00 |
| 5. இறை இரக்கம் | – | 6,730.00 |
| 6. மூதூர் | – | 6,000.00 |
| 7. நிலாவெளி | – | 5,000.00 |
| 8. கந்தளாய் | – | 2,830.00 |
| 9. சீனன் குடா | – | 2,000.00 |
| 10. இருதயபுரம் | – | 2,000.00 |
| 11. சாம்பல் தீவு | – | 1,000.00 |
| 12. தம்பலகாமம் | – | 500.00 |
| 13. கன்னியா | – | 500.00 |
| மொத்தம் | – | **118,487.00** |

தகவல் : ஆயர் இல்லம்

மற்றவர்களுடைய மனங்களைப்
புரிந்து கொள்ளவிட்டாலும்
பரவாயில்லை
அவர்களுக்கு மனம் என்ற ஒன்று
இருப்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

பணம் இருந்தால் நாலுபேர்
நம்மைத் திரும்பிப் பார்ப்பார்கள்
பணம் இல்லையென்றால் நாம்
நாலுபேரை திரும்பிப் பார்க்கனும்

பிரிவுகளை சந்திக்கும் போதுதான்
சில உறவுகளைப் பற்றி
சிந்திக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் தரும் நிஜங்கள்

## அருட்பணி B.A. யோசப்பின் அடிகளாரின் இறுதிச் சடங்கு



## மறைமாவட்ட C.Y.A நிகழ்வுகள்



13.14 சித்திரை 2013 கிரிக்கட் சுற்றுப் போட்டியில் பேராலயம், குவாடலூப்பே ஒன்றியங்கள் முறையே 1ம், 2ம் இடங்களையும் வலைப்பந்தாட்டப் போட்டியில் குவாடலூப்பே, பேராலயம் முறையே 1ம், 2ம் இடங்களையும் பெற்றன.



16.17.03.2013 ஆகிய திகதிகளில் Fr.நவாஜி, Fr.எழில் இ.ச தியானத்தை நெறிப்படுத்தினர்




பாலையூற்று திருத்தலத் திருவிழா - 26.05.2013



மறைமாவட்ட அன்பிய கொண்டாட்டம் உவர்மலைப் பங்கில் - 14.04.2013

## இறை இரக்கத் திருவிழா 07.04.2013





பேராலயப் பங்கின் தவக்கால நிகழ்வு - 26.04.2013

### மூதூர் சகாயபுரத்தில் மாதா சொரூபம் 04.04.2013

மூதூர் உப பங்கான சகாயபுரத்தில்
மூதூர் பங்குத் தந்தை தலைமை தாங்க
FR. டன்ஸ்ரன் அடிகளாரால் திறக்கப்பட்டது



**Welcome**

சாம்பல்தீவு பங்கிற்கு
புதிய பங்குத் தந்தையாக
Fr.A.எட்வின் OMI
அடிகளாரும்,
தூய மரியாள் பேராலயத்திற்கு
Fr.ஜஸ்ரின் அடிகளாரும்
நியமிக்கப்பட்டுள்ளனர்

**wish you all the best**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை திருமலையில் உள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் [illegible] திருகோணமலை அஸ்ரா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிட்டட் இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.